பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**26 02 2026** **6 45**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகில் அமைதிக்கான அனைத்து முயற்சிகளையும் இந்தியா ஆதரிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் இதுவரை **28** லட்சத்திற்கும் அதிகமான மின்சார வாகனங்கள் விற்பனையாகி உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ் குமார் தலைமையிலான குழுவினர் இன்றும் நாளையும் சென்னையில் ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

4. தேர்தலையொட்டியே மக்கள் நலத்திட்டங்களை ஆளும் திமுக அரசு அறிவித்து வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

5. உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-**8** சுற்றில் இந்தியா இன்று ஜிம்பாப்வே-யை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உலகில் அமைதிக்கான அனைத்து முயற்சிகளையும் இந்தியா ஆதரிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக இஸ்ரேல் சென்றுள்ள அவர், அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார்.

தீவிரவாதத்திற்கு எதிராக இந்தியா இரட்டை நிலைப்பாடின்றி நிலையான மற்றும் சமரசமற்ற கொள்கையைக் கொண்டுள்ளதாக கூறினார்.

தீவிரவாதம் சமூகத்தை சீர்குலைத்தல், வளர்ச்சிக்கு தடையாக இருத்தல் மற்றும் நம்பிக்கையை சிதைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அவர் கூறினார்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பால் நடத்தப்பட்ட தீவிரவாத செயல்களால் உயிரிழந்தவர்களுக்கு இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாக பிரதமர் கூறினார்.

இந்தியர்கள் அந்த வலியை உணர்வதாகவும், துயரத்தைப் பகிர்ந்துகொள்வதாகவும் தெரிவித்தார்.

இத்தருணத்தில் இஸ்ரேலுக்கு இந்தியா உறுதுணையுடன் இருப்பதாகவும் அவர் கூறினார்.

மும்பை தீவிரவாத தாக்குதலில் இஸ்ரேல் குடிமக்கள் உள்ளிட்ட அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் இஸ்ரேலியர்கள் எந்த பாகுபாடும், அச்சுறுத்தலும் இல்லாமல் வசித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இது இந்தியாவின் பெருமைக்கு சான்றாகும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

நாட்டில் இதுவரை **28** லட்சத்திற்கும் அதிகமான மின்சார வாகனங்கள் விற்பனையாகி உள்ளதாக கனரக தொழில்துறை அமைச்சர் திரு. ஹெச்.டி. குமாரசாமி கூறியுள்ளார்.

புதுதில்லியில் மின்சார வாகனங்கள் குறித்த தேசிய மாநாட்டில் உரையாற்றிய அவர், இதில் **20** லட்சம் இருசக்கர மின்சார வாகனங்களும், **3** லட்சம் மின்சார **3** சக்கர வாகனங்களும் அடங்கும் என்று தெரிவித்துள்ளார்.

முக்கிய நகரங்களில் **14** ஆயிரத்துக்கும் அதிகமான மின்சார பேருந்துகள் இயக்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதன் மூலம்

பொதுப் போக்குவரத்திலும் மின்சார பயன்பாடு விரைவுபெறுவதாக திரு. ஹெச்.டி. குமாரசாமி கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் தலைமையிலான குழுவினர் இன்றும் நாளையும் சென்னையில் ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுடன் அவர்கள் விவாதிக்க உள்ளனர்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி முறையற்ற பணப் பரிமாற்றம் மற்றும் தேர்தல் செலவினங்களைக் கண்காணிக்க வருமான வரித்துறையின் புலனாய்வுப் பிரிவு சார்பில் 24 மணி நேர கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி தனிநபரோ அல்லது அரசியல் கட்சியினரோ வாக்காளர்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக பணம், பரிசுப் பொருட்கள் உள்ளிட்டவற்றை விநியோகித்தால் அதுகுறித்து

கட்டணமில்லா தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் வாயிலாக தெரிவிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

தகவல் அளிப்பவரின் விவரங்கள் ரகசியம் காக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த புகார்களை **1 8 0 0 4 2 5 6 6 6 9** என்ற தொலைபேசி எண் மூலம் அல்லது **tn.electioncomplaints2026@incometax.gov.in** என்ற மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

தேர்தலையொட்டியே மக்கள் நலத்திட்டங்களை ஆளும் திமுக அரசு அறிவித்து வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை அருகே மதுரவாயல் மற்றும் பூவிருந்தவல்லி அருகே பிரச்சாரம் மேற்கொண்ட அவர், கடந்த **5** ஆண்டுகளில் வீட்டு வரி மற்றும் கடைகளுக்கான வரி **50** சதவீதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளதாக கூறினார்.

அரசு ஊழியர்கள், செவிலியர்கள், விவசாயிகள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி

நாள்தோறும் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் பராமரிப்பு பணிகள் காரணமாக சில ரயில்களின் சேவையை தெற்கு ரயில்வே மாற்றியமைத்துள்ளது.

அதன்படி சென்னை எழும்பூர் - செங்கோட்டை இடையே இயக்கப்படும் பொதிகை விரைவு ரயில் அடுத்த மாதம் 2ஆம் தேதி முதல் 16ஆம் தேதி வரை தாம்பரத்தில் இருந்து இரவு மணி 8.05க்கு புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் இருந்து சென்னை எழும்பூருக்கு இயக்கப்படும் நெல்லை விரைவு ரயில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் 15ஆம் தேதி வரை தாம்பரம் வரை மட்டுமே இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூரில் இருந்து திருச்சிக்கு காலை 8 மணிக்கு புறப்படும் சோழன் விரைவு ரயில், நாளை மறுநாள் முதல் அடுத்த மாதம் 15ஆம் தேதி வரை காலை மணி 10.15க்கு புறப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதற்கிடையே தாம்பரம் - கடற்கரை ரயில் நிலையம் இடையே மின்சார ரயிலில் பயணம் செய்வதற்காக பயணச்சீட்டு மற்றும் மாதாந்திர அட்டை வைத்திருப்போர் நாளை மறுநாள் முதல் ஏப்ரல் 6ஆம் தேதி வரை அலுவலக நேரத்தில் தலைமைச் செயலகம் வழியாக இலவசமாக பேருந்தில் பயணம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலை மணி 6.40 முதல் 9.40 வரையும், மாலையில் 5 மணி முதல் இரவு 8 மணி வரையும் சென்னை தாம்பரம் - கடற்கரை இடையே இரு மார்க்கத்திலும் கூடுதல் மாநகரப் பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் நெரிசலைத் தவிர்க்கும் வகையில் தெற்கு ரயில்வே கேட்டுக்கொண்டதற்கு இணங்க மாநகர பேருந்து நிர்வாகம் இம்முடிவை மேற்கொண்டுள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் மத்திய அரசின் மக்கள் மருந்தகம் மூலம் குறைந்த விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன.

அந்த வகையில் மக்கள் மருந்தகம் காஞ்சிபுரத்தில் புதிதாக திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்த மருந்தகத்தின் மூலம் குறைந்த விலையில் மருந்துகளை வாங்கிப் பயனடைவதாக பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

**(Voice Byte - Beneficiaries - 40 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரான் - அமெரிக்கா இடையே அணுசக்தி தொடர்பான 3வது சுற்றுப் பேச்சுகள் ஜெனிவாவில் இன்று நடைபெறுகிறது.

------------

இலங்கையில் 2019ஆம் ஆண்டு தேவாலயத்தில் நிகழ்ந்த தீவிரவாத தாக்குதல் தொடர்பாக அந்நாட்டு உளவுப் பிரிவின் முன்னாள் தலைவர் திரு. சுரேஷ் சல்லே கைது செய்யப்பட்டுள்ளார்.

------------

ரயில்வே ஓய்வூதியதாரர்கள் தங்களது தனிப்பட்ட தகவல் மற்றும் வங்கி விவரங்களை தொலைபேசி அழைப்பு வாயிலாகவோ அல்லது

சமூக வலைதளங்கள் வாயிலாகவோ தெரிவிக்க வேண்டாம் என்று ரயில்வே அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

------------

சுகாதார நலனில் செயற்கை நுண்ணறிவு குறித்த பாடத்தை யூ-டியூபில் அதிகமானோர் பார்வையிட்டதற்கான கின்னஸ் உலக சாதனையை தேசிய மருத்துவ அறிவியல் தேர்வு வாரியம் படைத்துள்ளது.

------------

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் 2 கோடியே 22 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கைத்தறிப் பூங்காவை அத்துறைக்கான அமைச்சர் திரு. காந்தி திறந்து வைத்தார்.

------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்ப்பு முகாம் இன்று காலை ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

------------

சேலம் கிச்சிபாளையம் காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்டிருந்த 30 இருசக்கர வாகனங்கள் தீப்பிடித்து சேதமடைந்தது.

------------

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை அடிப்படை உரிமையாக பார்க்கப்பட வேண்டும் என்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி கூறியுள்ளார்.

------------

நுகர்வோர்கள் இணைய வழியாக வாங்கும் பொருட்களை விநியோகிக்கும் பெண் தொழிலாளர்களுக்கான சாலை பாதுகாப்பு குறித்த கலந்துரையாடல் வேப்பேரியில் சென்னை பெருநகர போக்குவரத்துக் காவல்துறை சார்பில் நடைபெற்றது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-8 சுற்றில் இந்தியா இன்று ஜிம்பாப்வே-யை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

-------------

ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் - காலிறுதிக்கு முந்யை சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், **21-12, 21-11** என்ற செட் கணக்கில் போலந்தின் **Mikolaj Szymarowski-**ஐ வென்றார்.

**--------------**

ஃபிரான்சில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரித்விக் போளிப்பள்ளி - அமெரிக்காவின் தியோடர் வினேகர் இணை காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, **6-2, 3-6, 10-7** என்ற செட் கணக்கில் கனடாவின் **Cleeve Harper** - பிரிட்டனின் டேவிட் ஸ்டீவன்சன் இணையை வென்றது.

**<<<<The End>>>>**